# ஆத்மஜோதி.



ஆதி ஜோதி அருணை ஜோதியில்
ஜோதி ரமணர் ஜோதியானார்.

# பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ரமணஜோதி | 193 |
| 2 | ரமண ஸற்குரு | 194 |
| 3 | அருணாசல ஜோதியை விளங்க விளக்கிய ரமணஜோதி | 195 |
| 4 | பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் மஹாசமாதி | 198 |
| 5 | பக்தி | 200 |
| 6 | ஸ்ரீ அருணாசல பஞ்சரத்தினம் | 201 |
| 7 | திருச்சுழியும் பகவான் அவதரித்த மங்கல மனையும் | 203 |
| 8 | ஆரத்திபாடிடுவோம் | 206 |
| 9 | பகவான் ஸ்ரீ ரமணர் தாலாட்டு | 207 |
| 10 | ஸ்ரீரமணதேவ மானஸீக பூஜை | 208 |
| 11 | ரமணர் தத்துவம் வாழ்க | 209 |
| 12 | ஸ்ரீரமணத் தியானம் | 212 |
| 13 | ஸ்ரீ ரமணத்யானம் | 214 |
| 14 | ஸ்ரீ ரமண பாதமாலை | 215 |
| 15 | சோதி | 217 |
| 16 | ரமண முனி தோத்திரம் | 220 |
| 17 | செய்தித்திரட்டு | 221 |
| 18 | The Golden Master | (Cover Third Page) |





## ஆத்மஜோதி.

ஓர் ஆத்மீக மாத வெளியீடு.

சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ 75/- வருடச்சந்தா ரூ. 3/-
தனிப்பிரதி ச. 30.

"ஆத்மஜோதி" நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்.)

ஓம்.

# ஆத்ம ஜோதி.

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

| சோதி 2 | விக்ருதி௵ வைகாசி௴ | சுடர் 7 |
|---|---|---|

## ஸ்ரீ ரமண ஜோதி.

சித்தர்களும் முத்தர்களும் செறிந்து வாழ்ந்து
சேர்த்துவைத்த தவப்பயனின் சிறப்பே யாகும்
எத்திசையும் இவ்வுலகில் எங்கும் காணா
எழில்மிகுந்த தமிழ்நாட்டின் அமைதி என்னும்
அத்தகைய பரபீனுக்கு ஆக்கம் தந்து
அருணகிரி நாதனுடை அருளைத் தேக்கி
முத்திநெறி காட்டுகின்ற மோன ஞான
முழுமதியாம் ரமணமகா முனிவன் ஜோதி.

அணுவினொடு அணுமோதி அழியச் செய்து
ஆருயிர்கள் பதைபதைக்க அவதி மூட்டப்
பணவெறியும் பார்வெறியும் பற்றித் தூண்டும்
பாதகமே சாதனையாய்ப் படிக்கும் இந்நாள்
அணுவினொடு அணுசேர அணைத்து நிற்கும்
ஆண்டவனின் திருவருளை அறியச் செய்த
குணமலையாம் ரமணரிஷி மோன வாழ்வே
கொடுமைகளை நம்மிடையே குறைக்கும் போதம்.

இன்றிருந்து நாளைக்குள் மறைந்து போகும்
இச்சிறிய உடலினுக்குள் புகுந்து கொண்டு
நன்றிருந்து பேசுகின்ற நான்யார் என்று
காணில்ஒரு தரமேனும் நாடிப் பார்த்தால்
என்றிருந்து எங்குவந்தோம் எதுநாம் எல்லாம்
எளிதாகக் கண்டுகொள்வாய் என்றே சொல்ல
குன்றிருந்த விளக்கேபோல் திசையைக் காட்டும்
குறிக்கோளாம் ரமணமகா குருவின் வாழ்க்கை.

—ஆஸ்தான வித்துவான் இராமலிங்கம்பிள்ளை.

# ரமண ஸற்குரு.

ரமண ஸற்குரு ரமண ஸற்குரு
ரமண ஸற்குரு ராயனே;
ரமண ஸற்குரு ரமண ஸற்குரு
ரமண ஸற்குரு ராயனே,

புகழும் பொன்னுலகத்து வானவர்
போற்றி நின்று புகழ்ந்திடும்;
திகழு நன்னில மாந்தி ருச்சுழி
தன்னில் வந்த தயாபரன் (ரமண)

வாது செய்திடு மாயை தன்னை
வளைத்து நின்று மதித்தவன்,
சூது செய்புல னோடு வஞ்சகச்
சூழ்வி னைத்தொகை யற்றவன். (ரமண)

அருணை யீச னெடுத்த ணைத்திடு
மன்ப னென்குரு நாயகன்;
கருணை யேவடி வாக நின்றிடு
கற்ப கத்தரு வாகினேன். (ரமண)

மூன்று தேக மறந்து முப்பத
வாழ்வி னிற்குடி யேகினன்;
தோன்று மிச்சக வாழ்வி னிற்களி
யாது நின்றிடு தோன்றலான். (ரமண)

போற்றி யென்மனக் கோயி லுற்றிடு
புண்ணி யத்திரு மேனியாய்;
போற்றி நின்முகம் போற்றி நின்மனம்
போற்றி நின்பத மையனே. (ரமண]

வேங்கடரமணய்யர்.-

# அருணாசல ஜோதியை விளங்க விளக்கிய ரமண ஜோதி.

—(ஆசிரியர்.)—

ஜோதி வழிபாடு ஆதிவழிபாடு அது எம்மதத்தினருக்குஞ் சம்மதமானது; இனிவருஞ் சத்திய யுகத்திற்கு மிகவும் உகந்தது யோகி சுத்தானந்தர் தான் இயற்றிய 'இன்பமாலை' என்னும் அரிய சிறுநூலின் முகவுரையை "ஒவ்வொரு ஊரிலும் அன்பர்கூடி ஒரு மணிநேரம் சுத்தான்ம தியானம் செய்யவேண்டும். ஒரு பெரிய தோட்டத்தில் தியான மந்திரம் அமைக்கவேண்டும். சாதி மத வேறுபாடின்றி யாரும் அங்குவந்து குளித்து, உடுத்தி, கூடி தியானம் செய்யலாம், தியான மந்திரத்தில் பளிச்சென்ற வெளிச்சம், புதிய மலர்கள் இவைதான் இருக்கலாம். வேறுபடம், உருவம் வேண்டாம், அவரவர் உள்ளத்தையே கோயிலாகவும், அதிலுள்ள சுத்தான்ம சந்நிதியே கடவுளாகவும் தியானிக்கவேண்டும். ஆன்மக் கோயிலின் விரிவே உலகாலயம் என ஒவ்வொருவரும் கருதவேண்டும். இந்தச் சாதனம் இயல்பானல் மற்றப் பேரின்பச் செல்வங்களெல்லாம் தம்மால் வந்தெய்தும்' என்ற விண்ணப்பத்துடன் முடித்துள்ளார். 'ஆதி அருணசலம்' என அருணகிரிநாதர் பாராட்டிப்பாடிய திருவண்ணமலையில் அற்புத லிங்கமாய் இன்று நமக்குக் காட்சிதரும் பரம்பொருள் பிரமா, விஷ்ணு இருவரினதும் மயக்கந்தீர்க்க முதலில் தோன்றியது ஜோதிவடிவிலாகும். சிவராத்திரி, திருக்கார்த்திகைத்தீபம், மார்கழித்திருவாதிரை மூன்றும் அதைக்குறித்து நிற்பனவேயாம்.

ஜோதிவழிபாடானது எக்காலத்திலும் எந்நாட்டினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்தபோதிலும், ஜோதியிற் கலத்தல் என்னுங் கொள்கை பழைய தமிழ்நாட்டுச் சித்தர்கள் கண்ட முடிவுகளைக்கொண்ட சைவத்திற்கே சிறப்பாயுரியதாகும். தில்லைவாழந்தணர் மாணிக்கவாசகரைச் சூழ்ந்து நின்று அவரால் இயற்றப்பட்ட தமிழ்மாலையின் பொருளைத் தங்களுக்கு எடுத்துரைக்குமாறு

வேண்ட, அப்பெரியார் திருச்சிற்றம்பலத்தையடைந்து, தமது தமிழ்மாலைப் பொருளிதுவென நடராசப்பெருமானைக்காட்டி அந்த நடராசஜோதியில் எல்லாருங்காண மறைந்ததாக திருவாதவூரடிகள் புராணம் கூறுகிறது. தீதகற்றவந்தருளிய திருஞானசம்பந்தரும் நாதனெழில்வளர் சோதி நண்ணி அதனுட்கலந்து கொண்டதை பெரியபுராணத்தில் காண்கின்றோம்.

இவையெல்லாம் கற்பனைக்கதைகள், புராணப் புளுகுக்கட்டுகள் என நையாண்டிபண்ணி வாய் நீளங்காட்டும் நவீன நாஸ்திக உலகிற்கு அவற்றிலடங்கியுள்ள ஒப்பற்ற தத்துவத்தையும் அழிவற்ற உண்மையையும் விஞ்ஞான ரீதியாக விளக்க அவதரித்த பகவான் ரமணர் சென்றமாசம், பலசிறத்தினரும், பலமதத்தினரும் காணும் அரியமுறையில், ஜோதியிற் கலந்துகொண்டது அவரது அதிஅற்புத வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமான, அவரது பக்தர்கோடி எதிர்பார்த்த, முடிவேயாம். பூமண்டலத்தின் இதயமும் ஞானத்தபோதனரைச் சதாவாருங்களென அழைப்பதுமான அருணாசலத்தில் ஐம்பத்து நான்கு ஆண்டுகளாக தக்ஷிணாமூர்த்திவடிவில் அமர்ந்திருந்தவண்ணம் அவரால் உபதேசிக்கப்பட்ட அத்வைதத்தின் அருங்கருத்து எது என்பதைத் திருஷ்டாந்தத்தில் விளக்கவே ரமணஜோதி அருணஜோதியுடன் இரண்டறக்கலந்ததாகும். ஆகையால், அருணாசலஜோதி முன்னிலும் பன்மடங்கு பிரகாசிக்கும் என்பது திண்ணம். அதின் வடமேற்சாரலில் வாழும் அநேக சித்தர்களுடன் ஸ்ரீரமண மூர்த்தியும் சூக்ஷும உடலுடன் வதிகின்றார். அவரது அருளுக்குப் பாத்திரமானோர் சகலருக்கும் அவர் வழிகாட்டியாகவே என்றும் இருப்பார். அவர் இறந்துவிட்டதாகவோ, மறைந்துவிட்டதாகவோ, எண்ணி மனம் புண்ணுதல் அறியாமையின்பாற்பட்டதாகும்; அவரது ஒப்பற்ற உபதேசத்திற்கே இழுக்கைத்தருவதாகும்.

சைவர்கள் அவரை கனிந்த பழம்போலப் பூர்வபுண்ணியத்தால் பரிபக்குவமான சாயுஜ்யசித்தரெனலாம், வைஷ்ணவர்கள் அவருக்கு நித்திய முக்தரெனும் பட்டத்தைச் சூட்டலாம்; சீகாழி கண்ணுடைய வள்ளலார் ஒழிவிலொடுக்கத்தில் விளக்கியுள்ள ஞானிக்குரிய அத்துவிதி; ஏகாந்தி, ஆநந்தி, சுத்தன், துரியன், அவதூதன், துறவி, சிவயோகி, திருவாணி, விரத்தன் என்ற பத்துக் காரணப்பெயர்களும் ஒருங்கே அவருக்குப்பொருந்தியுமிருக்கலாம்.

(விரக்தனென்றால் சிவத்தோடு அத்துவிதமாக இருக்கின்றேனென்னும் வாசனையும் இறக்கப்பெற்றவன்.) ஆனால், நாம் அவரை முருகப்பெருமானின் அவதாரமாகவே கருதுகின்றோம். ஆயிரக்கணக்கான மெய்யன்பருக்கு அவர் பழனி ஆண்டவனாகவே காட்சியருளியுள்ளார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ராமராகவும் கிருஷ்ணராகவும் அடியார்கட்குத் தோன்றியது வடநாட்டு மரபுக்குப் பொருந்தியதுபோலவே, ஸ்ரீரமணமூர்த்தி திருஞானசம்பந்தரைப்போல் முருகன் அவதாரமாகப் போற்றப்படுவது பழந்தமிழ் மரபுக்கு ஒத்ததாகும். இதனை உபசாரமாகச் சிலர் கருதலாம்; உண்மையாகப் பலர் ஏற்கலாம். அவரவர் பெற்ற அநுபவத்தைப் பொறுத்துள்ள விஷயம் இது.

ஸ்ரீ ரமண தேவரின் குணாதிசயங்களைச் சுருக்கமாக எடுத்துச்சொல்லின், அவரிடம் புத்தரின் கருணையும், மகாவீரரின் உக்கிரதபசும், ஏசுநாதரின் பரிவும், நபிநாயகத்தின் மனஉறுதியும், சங்கரரின் ஞானமும், சைவசமயாசாரியர்களின் உலகத்தொண்டும், ஆழ்வார்களின் அடைக்கலநெறியும், தாயுமானவரின் சமரஸமும், ராமகிருஷ்ணரின் பரபக்தியும், இராமலிங்கரின் ஜீவகாருண்யமும் ஒருங்கே அமைந்திருந்தனவெனலாம். இவற்றுள், அவரது இறுதி நாட்களில் தனிச்சிறப்பெய்தி நின்றது கருணையாம். இதனை நேரிற்காணும் பாக்கியம்பெற்றோர் உண்மையிற் புண்ணியஞ்செய்தவர்களே. அவர் உடற்சட்டைதாங்கி உலாவியது மக்களுக்கு உய்வழிகாட்டவே என்பதை சந்தேகவிபரீதமற வாழ்க்கையால் மெய்ப்பித்தபின்னரே அவர் அந்த உடலை உதறித்தள்ளினர். அதனால் எப்போதாவது அவருக்கு ஏதாவது பிரயோசனம் இருந்ததேயில்லை; அப்பூத உடலை அவர் எடுத்தது உலகு செய்த புண்ணியங் காரணமாகவேயன்றி அவரது சொந்தக் கர்மத்திற்கீடாகவல்ல என்பதை நாம் உணரும்போது, ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் தம்மை ஐந்தாம் வயதில் ஆட்கொண்ட செந்தூர்க் கந்தன் மீது பாடிய கலிவெண்பாவிலுள்ள.

"கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபர னென்றோர் திருப்பேர்கொண்டு-திருநோக்கால்
ஊழ்வினையைப்போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழுமத்துவாக்களிருமூன் றும்—பாழாக
ஆணவமானபடலங்கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி"

என்ற வரிகளடங்கிய உண்மை அவருக்குப் போல் பிறர்க்கும் எக்காலத்திற்கும், பொருத்தமானதென்பது தெற்றெனவிளங்கும்.

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் மஹா சமாதி.

(ஆசிரியர், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.)

உலகோருய்ய அண்ணுமலையிலே ஐம்பத்து நாலு ஆண்டுகள் அமர்ந்தருளியிருந்த ஞானக் கதிரோன் (ஸ்ரீ ரமண மகரிஷிகள்) சென்ற ஏப்பிரல் 14-ம் நாளன்று வெள்ளிக்கிழமை இரவு 8-47 க்குத் தன் உருக் கரந்தனன். புறவிருள் நீக்கும் பரிதியின் உதயமும் மறைவும், உலக மக்களது பார்வைக்குத் தோன்றும் நிகழ்ச்சிகளே யன்றி, உண்மையாகப் பரிதிக்கு ஏற்படும் விகாரங்களாகா என்பதை வான நூலார் நன்கறிவர்; அதுபோல, உரை மனம் இகந்த ஒரு பரம்பொருளாம் உலவா இன்ப ஞானசோதியும் தோன்றுவதும் மறைவதும் ஐம்புலக் காட்சிக்கேயன்றி மெய்யுணர்வுற்ற திறவோர்கட்கல்ல என்பர் ஞான நூலார். இவ்வுண்மையை உள்ளவாறு உணர்ந்தோர் உயர்வற உயர்ந்த ஞானியரே யாதலின், அவரல்லாத மிகப்பெரும்பாலார் ஏனையோர் சோதியின் தோற்றத்தைக்கண்டு ஒளி பெற்று மகிழ்ந்து, மறைவைக்கண்டு ஒளியை இழந்தமையால் மனம் அழுங்குவர். ஸ்ரீ ரமண மகரிஷிகளின் மஹா சமாதியால், கண்ணகல் ஞாலம் கண்ணை இழந்தது: அன்பர்கள் அனைவரும் தம் உள்ளக் கமலங்களை அலர்த்திய கதிரவனை இழந்தனர்; உலகத்துயரில் உழந்தோர் தமக்கு ஆறுதலையூட்டும் ஒரு பேரூற்றை இழந்தனர்; அலையும் மனத்தையுடையார் அதனைத் தடுத்தாண்ட அரும் பெரும் அசல நோக்கினை இழந்தனர்; தத்துவ நூலார் அனுபூதி வடிவான ஓர் எடுத்துக்காட்டை இழந்தனர்; பகவத்கீதையும், அவதூதகீதையும், அஷ்டவக்ரகீதையும் தம்மை அறிய விழைவார்க்குத் தெளிவுறப் போதிக்கும் ஒரு மோன விரிவுரையை இழந்தன. நாத்திகரும் மேற்றிசை விஞ்ஞான வாதியரும் தமது ஐம்புலத்தருக்க அறிவினை விஞ்சிய ஒரு வியத்தகும் ஒரு வாழ்க்கைப் புதிரை இழந்தனர் ஆசிரமத்து வாழும் விலங்குகளும் தம் ஆருயிர் அன்பரை இழந்தன; அடிகளாரது அன்பர் கணமும் புகழுநர் கணமும் நன்மணியை இழந்த நாகம்போலவும், விண்மணியை இழந்த பகல் போலவும், முழுமதியை இழந்த இரவு போலவும், கண்ணை இழந்த

முகத்தினைப்போலவும். இருந்தனர், ஏங்கினர்; நீக்கவொண்ணு நிகழ்ச்சியாயின், துயருறல் வீணெனும் தொல்லுரை நினைந்தே நெஞ்சம் தேறினர்.

மெய்ப் பொருளை உணர்ந்து அதனோடு ஒன்றித்து நிற்கும் ஒரு ஞானி நானா சாமுன் "நான் சாகும் பேறு பெறுதலின், சிவ போதம் ஒன்றே (பிரம்ம போதமே) ஞானியின் பால் எஞ்சிநிற்கும் வரம்பிலா ஆற்றலும் தூய மெய்யன்பும் அந்த ஞானியின் உள்ளத்தை ஒரு மடையெனக் கொண்டு மக்களுலகிற்குத் தடையறப்பாயும். இங்ஙனம் அருள் வெள்ளம் இடையுறாது பெருகிக் கொண்டிருத்தலின், ஞானியின் முன்னிலையை அணுகும் அன்பர்கள் தம்பால் ஒரு புத்துயிரும் புத்தொளியும் புகுவதைச் சிறிதேனும் உணர்கின்றனர். இதற்கு ஞானியின் ஸங்கற்ப மின்மையே அடியாகின்றது. இம்முறையிலே அருளை எம்மருங்கும் பொழிந்து 'இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி,' உலகோரை உயர்ந்த நெறியின் பால் உய்த்து வந்தார் அடிகளார்.

அருணசலத்திலே இறைவன் சோதி மலையென உருவங் கொண்டனன் என்பர்; அதனை அறிந்தார் அருகியே இருப்பர்; ஆயினும், அம்மலை மீதே ரமண அடிகள் ஞான சோதிமலையென ஊன்கண் காணக் காட்சியளித்ததைப் பலரும் அறிவர். கி. பி. 1879-ம் ஆண்டிலே வெங்கடராமன் எனும் பெயரோடு திருச்சுழியில் தோன்றிய குழந்தை, கிளரொளி இளமை கெடுவதன் முன்னமே இறைவனருளால் அத்வைத வாசனை ஓங்கப்பெற்றது. உலகியற் கல்வியிற் கருத்திலனாய், மெய்ப் பொருட்காட்சியிற் கருத்தூன்றிய அவ் இளைஞன் பதினேழாவது வயதில் தனது உண்மை இயல்பையறியும் தகைமையை எய்தினன். சில மாதங்கட்குள் அண்ணமலையாரது அருட்சோதி இளைஞரைத் தன் பால் அழைத்தது, இழுத்தது; அதற்கு வசப்பட்டு, அனைத்தையும் துறந்து அவ்வழியே ஏகி அண்ணமலையாரின் அடியினை அமர்ந்து அருந்தவம் புரிந்து, ஸஹஜ ஸமாதி எய்தினர் அடிகளார். அத்வைத ஞான மலைச்சிகரத்தில் ஏறிநின்ற அண்ணலார் அங்கிருந்தும் இழிறங்காது, உலகமக்களனைவரையும் உண்மைக் காட்சியோடு நோக்கியருளிக் கொண்டு வந்தார். இடையிடையே தமது அநுபூதியின் பெருமையைத் தாமியற்றிய நூல்கள் வாயிலாகவும், தமது

—நான் யார்—நான் யார்—நான் யார்—நான் யார்—நான் யார்—

# — பக்தி. —

—:-:—

—நான் யார்—நான் யார்—நான் யார்—நான் யார்—நான் யார்—

(ஈசனது முன்னிலையில்) வாயு சிறு துரும்பை எரிக்கவும், அக்னி அதைத் தகிக்கவும், முடியாமல் போயிற்றென்றால், அகந்தையின் வசப்பட்ட மனிதனால் ஏதாவது ஒரு காரியத்தை ஸாதிக்க எப்படி முடியும்?

பரமனுடைய உலகம் தனக்கு வெளியில் வெகுதூரத்தில் இருக்கிறதென்று எண்ணுகிறான், தேகத்தில் அகந்தையால் மயங்கின மனிதன்; உண்மை பரனுலகம் இருதயத்தினுள்ளேயே இருக்கிறது.

இரண்டு ஆத்மாக்களுண்டு; ஜீவாத்மா ஒருவன்; பரன் மற்றொருவன் என்பது அஞ்ஞானிகளின் எண்ணம்; ஆத்மா ஒருவனே; இரண்டல்ல; பரமன் உண்மையான ஆத்மா; மற்றவன் பொய்த்தோற்ற மாத்திரமே.

மறந்தும் கூட ஈசன் ஒருக்காலும் அகங்கரிக்காத காரணத்திலேயே பரமனுக்கு அகிலத்திற்கு ஈசனாகும் தன்மையும், எல்லாருடைய வணக்கத்திற்கு உரியவனாகும் தன்மையும் வந்தன.

முத்தியை விஷ்ணு தருவார்; ஞானத்தைச் சிவன் தருவார் என்று சொல்லப்படுகிறது; உண்மையில் ஞானமே முத்தியாவதால் விஷ்ணு சிவன் எனப்படுவோர் இருவரும் ஒன்றே.

பகவான் ரமணர்;

---

முற்பக்கத்தொடர்ச்சி.

திருவாயினின்றெழுந்த மணிமொழிகள் வாயிலாகவும் போதித்து வந்தார். உள்ளது ஒன்றேயாயின் அதனோடு ஒன்றியுறைந்த அவரை யாம் பிரிந்தோம் என்னல் பொருந்துமோ? பிரியாது யாண்டும் எங்கணும் அவர் உள்ளவர் என்னலே பொருத்தமாம் மனோவாசகங் கடந்த அப்பரம்பொருளின் மாட்சியை உரைக்கவல்லார் எவரே? "அது வானால் அதுவாவர் அதுவேசொல்லும்" என்று விடுத்து, நம் உள்ளத்தை அடிகளாரது உண்மையியல்பில் ஒன்று படுத்த முயலுவோமாக!

# ஸ்ரீ அருணாசல பஞ்சரத்தினம்.

(பகவான் அருளியது)




வெண்பா.

1 அருணிறை வான வமுதக் கடலே
விரிகதிரால் யாவும் விழுங்கு—மருண
கிரிபரமான் மாவே கிளருளப்பூ நன்றாய்
விரிபரிதி யாக விளங்கு.

2 சித்திரமா மிஃதெல்லாஞ் செம்மலையே நின்பாலே
யுத்திதமாய் நின்றே யொடுங்கிடுமோ—னித்தியமு
நானென் றிதய நடித்திடுவை யாலுன்பேர்
தானிதய மென்றிடுவர் தாம்.

3 அகமுகமா ரந்த வமலமதி தன்னா
லகமிது தா னெங்கெழுமென் றாய்ந்தே—யகவுருவை
நன்கறிந்து முந்நீர் நதிபோலு மோயுமே
யுன்கணரு ணாசலனே யோர்.

4 வெளிவிடயம் விட்டு விளங்குமருணேசா
வளியடக்க நிற்கு மனத்தா — னுளமதனி
லுன்னைத் தியானித்து யோகி யொளிகாணு
முன்னி லுயர்வுறுமீ தூன்

5 உன்னிடத்தி லொப்புவித்த வுள்ளத்தா லெப்பொழுது
முன்னைக்கண் டெல்லாமு முன்னுருவா — யன்னியமி
லன்புசெயு மன்றே னருணேச லாவெல்கு
மின்புருவா முன்னிலாழ்ந் தே.

ஓம்.

மூவுலகுந் தாங்கும் எங்கள் முதல்வனாரை
முத்தமிழுந் தந்துதவுஞ் சித்தனாரை
தாவு மனத்தன்மைகளுக் கதியனாரை
தன்னிலையில் தானாய தன்மையாரை
மேவு பலவாக் காணும் மெய்யனாரை
மெய்யாக உள்ள உணர் வொளியினாரை
காவுடைய அருணகிரி அண்ணலாரைக்
கண்டுள்ளே களித்திட்டேன் பாங்கிமாரே.

உள்ளில்லா வெளியில்லா வெளியினாரை
உறங்காத விழியாத விழியினாரை
விள்ளாத விண்ணாய விண்ணினுள்ளே
வியன்பரையை விழுங்கிநின்ற வீட்டினுள்ளே
கொள்ளாத உலகமெலாங் கொண்டுநின்ற
குவலயத்திற் கப்பாலாங் குகையினுள்ளே
கள்ளாத மனங்கொண்ட கணவனாரைக்
கண்டுள்ளே களித்திட்டேன் பாங்கிமாரே.

ஓர் பக்தன்.

# திருச்சுழியலும் — —
# பகவான் அவதரித்த
# — — மங்கல மனையும்.

[சுத்தானந்தர்]

மதுரைக்குத் தென்கிழக்கே 30 மைல் தூரத்திலும், விருது நகரிலிருந்து 18 மைல் தூரத்திலும் திருச்சுழியல் உள்ளது. இது மணிவாசகராலும், சுந்தரராலும் பாடல்பெற்ற சிவஸ்தலமாகச் சிறந்து விளங்குகின்றது;-

"அன்புடை நெஞ்சத் திவள்பே துறவம் பலத்தடியா
ரென்பிடை வந்தமிழ் தூறநின் ரூடி யிருஞ்சுழியற்
றன்பெடை நையத் தகவழித் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேற்றுயி லும்வய லூரன் வரம்பிலனே!"

என்று மணிவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையாரில் அருளியுள்ளார்.

"ஊனுயுயிர் புகலாயக விடமாய்முகில் பொழியும்
வானுய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
தேனுதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழியல்
நானுவித நினைவார்தமை நலியார்நமன் றமரே!"

என்று நட்டராகத்தில் நயமிகு சுந்தரரும் சிறப்பித்துள்ளனர். அதன் மிசை அவதரித்த ஞானஜோதியை யறிந்து தமது ஞான ஜோதியைத் தூண்டுவோர் அமரரே! அவரை நமன்றூதர் நலிவரோ! திருச்சுழிக்குத் தனியாக ஒரு புராணமும் ஏற்பட்டுள்ளது. இத்தலத்திலமர்ந்த கடவுள் திருமேனி நாதர்; அம்மையார் துணைமாலை நாயகி. பூமிதேவியாரும், கௌதம முனிவரும் பூசித்து வழிபட்ட தலம் இது. 1879-ல் இவ்வூர் சுமார் 500 வீடுகள் கொண்ட அமைதியான கிராமமாயிருந்தது. திருமேனி நாதர் கோயிலைச்சுற்றியே பெரும்பாலும் அதன் வாழ்வு அமைந்திருந்தது. மதுரையினின்று இராமேசுரத்திற்குச் செல்லும் வழிப்போக்கர் இங்குள்ள தருமசத்திரத்தில் தங்கிச்செல்வர். இது ராமநாதபுரம் ஜமீனில் ஒரு தாலுகாவின் தலைமையூர். இனி இவ்வூரைச் சுற்றிப் பார்ப்போம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்"

மாஜிஸ்ரேட் கோட்டினின்று, தமது தொழிலுக்கேற்ற சட்டையும் பாகையுமணிந்து, ஒரு வழக்காளர் (வக்கீல்) வெளிவருகிறார்; கூர்ந்த விழியார்; உறுதியும் பொறுமையும் பொலியும் திருமுகமுடையார்; ஈகையாலே நீண்ட கரமுடையார். இவரையே நாம் பின்பற்றவேண்டும்; தம் மனதைப்போலவே விசாலமான வீட்டில் நுழைகிறார்.

வீட்டில் புதிய விருந்தாளிகள் வந்திருக்கின்றனர்; கலகலவென்று கட்சிக்காரரும் நிரம்பியுள்ளனர்; கலந்துபேசுவதற்குச் சில உத்தியோகஸ்தர்களும் வந்திருக்கிறார்கள். அனைவரையும் அவர் முகமலர்ந்து பேசி மகிழ்விக்கிறார். பின்பு மாலைக்கடன்களை முடித்துக் கோயில் புக்கு, சிவனை வழிபட்டுவந்து, விருந்தினருடன் உண்கிறார். தேடிவந்தவருக்கு இருக்க நல்லிடந் தருகிறார். முகம்பார்த்து அகமகிழ்ந்து அவர் விருந்தோம்பும் அன்பை யாவரும் போற்றுகின்றனர்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு;"

இவரே நமது சுந்தரமய்யர்; பராசர கோத்திரர். தமது தாளாண்மையாலும், தாராளத்தாலும், தயாளத்தாலும் படிப்படியாகப் பெருமை பெற்றோங்கியவர். திருடர் கூட இவருக்குத் தீங்கிழைப்பதில்லை. இரண்டு ரூபாய் சம்பளத்தில் மணியம் குமாஸ்தாவாகத் தொடங்கி, பின்பு பத்திரமெழுதும் வேலையை மேற்கொண்டு, அதினின்று பிரைவேட் வக்கீலாக உயர்ந்து, தமது மதியாலும் விவகாரத்திறத்தாலுஞ் சிறந்து செல்வரானார். ஆனால் நமது சுந்தரமய்யர் செல்வம் கருமுகிற் செல்வம்.

"ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு"

ஊருணி நிறைவதும் ஊரையே யூட்டும்; சுந்தரமய்யர் செல்வநிறைவும் விருந்தினரையே யூட்டும் வீட்டில் சிவவழிபாடாகி ஜீவவழிபாட்டுடனேயே வயிற்றுவழிபாடு நடக்கும். கதாகாலக்ஷேபங்

கள், புராண இதிகாசங்கள் இடையிடையே வீட்டில் நடைபெறும். மற்றப்படி சுந்தரமய்யர் தமது தொழின் முயற்சியிலேயே ஈடுபட்டிருப்பார். அவருக்கு ஊரெல்லாம் அன்புறவே.

நல்லதுணை நின்று, நன்றி மறவாதான்
யெல்லார்க்கு மின்னுறவென் றெண்.

சுந்தரமய்யர் தந்த ஞான விருந்திற்கு நாமும் விருந்தாளியாதலின் வீட்டிற்குச் செல்வாம்.

மெல்லிய குரலால் தக்ஷிணாமூர்த்தி யஷ்டகம் பாடிக்கொண்டே இற்பணிபுரியும் ஒரு கற்பணி விளங்குகிறாள். விருந்துடன் வரும் தனது நாயகனை "அனைத்துந்தயார்" என எதிர்நோக்கிப் புன்னகை புரிகிறாள். அப்பொன் முகத்திருவே அழகம்மை; பகவானை ஈன்ற பாக்கியம் பெற்றவள்; அறமும் அன்பும், ஐங்கடனும் ஆக்கிடற்குத் தன் கணவனின் உற்றதுணையாவாள்.

இல்லறமே வீட்டின்பம் இல்லாளு நல்வாழ்வும்
புல்லித் தழைக்கும் புகழ்.

இவ்விருவரும் பாட்டும் பண்ணும்போ லொன்றி நடத்தும் இல்வாழ்வின் பெருமை பொன்னே! ஆண்மையும் பெண்மையு மழகுடன் கூடி, மாணறங்காத்து, மக்களையீன்று, அண்டிய விருந்திற் கன்புடனூட்டிக் காதலுங் கற்புந் தீதறக்காத்து, கடவுட் பணிகள் சுடருறச் செய்து, தாமும் வாழத் தருமமும் வாழ, தாரணி வாழத் தாங்கிய மனையறமன்றோ இவர் காத்தது! அன்பும் அமைதியும் அருளும், அழகும், இன்சொல்லும் ஈகையும் அதன்மிசை விளங்குகின்றன.

பெற்றோரின் வாழ்க்கையாற் பெற்றசே யின்குணமாம்
பெற்றோர்க்குத் தூய்மை பெரிது!

தூய ரமணன் இவர்களது தூயவாழ்விற் கனிந்தான். இருவரும் வசிட்டரும் அருந்ததியும், சத்திராமும் சந்திரமணியும் போல வாழ்ந்தனர்.

தந்தையும் சுந்தரமே தாயும் அழகம்மை! மைந்தனும் ஞான அழகு! இம்மணி விளக்காக மூன்று மைந்தர் பிறந்தனர்:— அவர்கள் முறையே நாகசாமி, வெங்கடராமன், நாகசுந்தரம் ஆவார். அலர்மேலு மங்கையென்னும் புதல்வியும் உண்டு. வேங்கடராமனே திருவருணையில் சென்ற ஐம்பத்திரண்டு ஆண்டுகளாக ஜகத்குருவாக வீற்றிருந்த ஸ்ரீ ரமண மூர்த்தியாவர்.

"முன்னொருநாட் சனற்குமர னாகத் தோன்றி
மூவருடன் மறைபயின்ற முருகன் கண்டாய்
பின்னொருகாற் சம்பந்தப் பெருமா னாகிப்
பிறைசூடி மகிழ்பண் ணிசைத்தான் கண்டாய்
மன்னுயிர்கள் உய்வதற்காய்ப் பாண்டி நாட்டில்
மறுபடியும் வந்துதித்த மணாளன் கண்டாய்
உன்னுவா ருளத்தொளிரு முண்மை கண்டாய்
உலககுரு வாம்ரமண மூர்த்தி தானே."

---

## ஆரத்திபாடிடுவோம்.

1 பண்டைத்தவம் வளர பாரதநெறி விளங்க
அண்ணாமலை முனிவர்க்கின்று-ஆரத்திபாடிடுவோம்.

2 கண்ணுற் கருணை செய்து கர்மவினை தீர்த்த
அண்ணாமலை முனிவர்க்கின்று—ஆரத்திபாடிடுவோம்.

3 தந்தையாம் சுந்தரமும் தாயாம் அழகம்மைபெற்ற
அந்தமிலா இன்பனுக்கின்று—ஆரத்திபாடிடுவோம்.

4 நானார்எனும் வித்தை நயமுறக் காட்டிவைத்த
ஞான வமுதனுக்கின்று-ஆரத்திபாடிடுவோம்.

5 வள்ளலார் வாக்குப் பொய்யாது அவதரித்த
வள்ளலாம் ரமணனுக்கின்று-ஆரத்திபாடிடுவோம்.

6 அருணாசலப்பேரால் அப்பனைத் தேடிவந்த
அருணைவாழ் முனிவர்க்கின்று-ஆரத்திபாடிடுவோம்.

'சாதகன்'

# பகவான் ஸ்ரீரமணர் தாலாட்டு.

ஆனந்தம்மா

தேவர் சிறைநீக்கத் திருச்சுழியில் வந்துதித்த
மூவர்க்க தீத முதல்வரே கண்வளரீர்
சயன வலங்கார சாக்ஷியாய்த் தாமிருந்த
நயன வுபதேச நாயகமே கண்வளரீர்
அருணமலைச் சாரலிலே யத்வைதத் தொட்டிலிலே
கருணை புரியவந்த காரணரே கண்வளரீர்
வேதனைக ளற்றபெரு விஸ்தார மண்டபத்தில்
வாதனைக ளற்ற பரவஸ்துவே கண்வளரீர்
அச்சமெலாந் தீர்ந்தே யருளமுதந் தாமுண்ட
நிச்சலப் பேரானந்த நிர்மலரே கண்வளரீர்
சற்சங்க சாகரத்தே சகஸ்ரதள புஷ்பமிசை
நிற்சங்க வத்வைத நிர்மலரே கண்வளரீர்
சொல்லின் சுவைவடிவே தோத்திரத்துக் கோர்முடிவே
அல்லும் பகலுமற்ற வாரியரே கண்வளரீர்
கண்டுணர்சச்சித்தே கலக்கமற்ற சாக்ஷியே
கொண்டுணர்ந்தோர் தம்மிதயக் கோயிலிலேகண்வளரீர்
சிதாகாயத் தேசயன தேசிகமா ரத்தினமே
மகாகாய மாய்நிறைந்த மாதவமே கண்வளரீர்
மதாசாரந் தான் கடந்த மௌன மலரணையில்
சதாசாரியாய் விளங்கும் சற்குருவே கண்வளரீர்
இதயகம லத்தே இயற்கையிலே தான்விழித்த
உதய ஒளிமயமா முத்தமரே கண்வளரீர்
ஆனந்தத் துள்ளே யபேதமாய்த் தானிறைந்த
ஞானந்த மற்றவொளித் தாணுவே கண்வளரீர்
அந்தணர்தங் குலவிளக்கே யன்பருக்கோ ராருயிரே
சுந்தரனார் புண்ணியத்தின் தோன்றலே கண்வளரீர்
கோசங் கடந்து குணரகித மானவரே
பாசமகன் றோரிதய பத்மமதிற் கண்வளரீர்
மூன்றுகாயங் கடந்த மோன ரகசியமே
ஆன்றோர்க ளேத்தும் அருட்குருவே கண்வளரீர்
வரையற்ற பேரொளியே வாக்குமன அகோசரமே
திரையற்ற குருமணியே திகம்பரரே கண்வளரீர்
ஓங்கார வுள்ளொளியே ஒப்பற்ற பெருவெளியே
ஆங்கார மற்றவருள் அறிவுருவே கண்வளரீர்
ஆதியரு ணாசலத்தில் அடியார்குழாம் போற்றிநிற்கச்
சோதி தனிற்கலந்த சோதியே கண்வளரீர்.

# ஸ்ரீ ரமண தேவ மானஸீக பூஜை.

(பிரம்ம ஸ்ரீ ஜகதீசுர சாஸ்திரிகள் இயற்றிய வடமொழிப் பாடல்கள் சிலவற்றின் சாரம்.)

ஓ மனமே! வேதாந்த வாக்கியங்களாலும் கூட அறிய முடியாதவனும், வியாபகனும், ஆச்சிரமத்தில் வசிக்கின்ற பௌனிகளான சீடர்களால் எப்போதும் சேவை செய்யப்படுகின்றவனும், ஆனந்தமாகிற அமுத சமுத்திர அலைவரிசைகளால் எப்போதும் ஊஞ்சலாட்டப்பட்டவனும், அருணா பர்வத வாசத்தில் மிகப் பிரியமுள்ளவனும் ஆன ஸ்ரீ ரமணனை பக்தியால் சிந்தனைசெய்து ஸாபல்யம் பெற்று வாழ்வாயாக.

o o o o o

மா; அசோகம், தமாலம், தேக்கு, சந்தனம், வில்வம் முதலிய மரங்களால் அலங்கரிக்கப்பட்டவனே! ஸ்ரீ ரமணனது ஸ்ரீ பாதந் யாசங்களால் பரிசுத்தி பெற்றவனே! பிரபுவே! அருணாசலா! உயர்ந்த உனது சிகரத்திலுள்ள குகைகளில் வசிக்கும் முனிசிரேஷ்டர்களுக்குப் பேரானந்த உறக்கம் விளைவிப்பவனே! உன்னிடம் மிகுந்த பக்தியுள்ளவர்கள் மனதில் விளையாடுபவனே! உனக்கு வணக்கம்.

o o o o o

ஹே குரு ஸார்வ பௌமனே! ரமண! நினது பாதசேவை புரிகின்றவர்களும், கமண்டலம் மான்தோல் வஸ்திரம் ஆகியஇவைகளைக் கையில் வைத்துக்கொண்டிருப்பவர்களும், பிரகாசிக்கின்ற ஆடையாபரணங்களைத் தரிப்பவர்களும் உன்கிருபாகடாட்சத்தால் ஆத்மஞானம் பெற்றவர்களும், பிரம்மானந்த அமிர்த வாரிதியில் மூழ்கிக் கிடப்பவர்களுமான உன் ஊழியர்களை பிரதிதினம் மனதில் தியானிக்கிறேன்.

o o o o o

ரமணா! உனது குணகணங்களையும் மகிமையையும் கொஞ்சமும் வர்ணிக்க முடியாமல் வேதங்களெல்லாம் களைப்படைந்தன; வியாஸர் முதலிய ப்ராசீன ஆசாரியர்களும் வைராக்கியமடைந்தனர். வராகர்களாகிய நாங்கள் எம்மட்டு? ஆயினும், அளவிறந்த குண வைபவம் பொருந்திய உன்னைத் துதிப்பதில் எங்களுக்கும் கொஞ்சம் அருகதை இல்லாமற் போகவில்லை. தேவர் சாப்பிடக் கூடிய அமிர்தம் மனிதர்களுக்குக் கிடைக்குமாயின் சாப்பிடாது விடுவார்களா?

o o o o o

# "ரமணர் தத்துவம் வாழ்க"

——(:):-:— :-:(:)——

(ஸ்ரீ வெங்கத்தூர் குமார சர்மா.)

போர்க்களம் புவி, என்னேரமும் ஓயாது குழப்பம், கலவரம், சண்டை. பூசல்கள் நடந்தவண்ணமே இருக்கின்றது. சிறிது அமைதியோ சாந்தியோ அடையலாம் என்றால் அது கிடையாது அமைதியை நாடி எங்கு சென்றாலும் அதைப் பெறமுடியவில்லை. அமைதியற்ற உலகிலே வாழும் ஆத்மா அமைதியை அடைய ஆசைப்படுவது இயற்கையே. ஆனால் அதை எங்கே அடையலாம்? எப்படிப்பெறலாம்?

எலும்புத் துண்டு ஒன்றிற்காக நாய்கள் விழுந்து போரிடுகின்றன. கோழியை துரத்துகின்றது நாய். எப்பொழுது வரும் என்று எலியை எதிர்பார்த்து பூனைகள் பதுங்கிப்பார்க்கின்றன. குளத்திலோ ஏரியிலோ மீன் முகத்தைக் காட்டுமா என்று எத்தனை பறவை எதிர்பார்க்கின்றன? பாம்பைப் பார்க்கின்றவா மயிலும் கீரியும் குத்திக் கௌவிக்கொள்ள! வன மிருகங்கள் ஆடுமாடு முதலிய கால்நடைகளைக் கொன்று தின்ன காத்துக்கொண்டிருக்கின்றன. இவை மட்டுமா? ஆறறிவு படைத்த மனித சமூகத்தினர் ஒவ்வொரு தினமும் புரியும் அக்கிரமம், கொடுஞ்செயல்கள் கணக்கற்றவை. குற்றம்புரிய நேரிடுகிறதாக வாதிக்கலாம் ஆனால் குற்றமே செய்யாதிருக்க முடியுமா என்று வினவலாகாது? முடியும் என்ற பதில்தான் கிடைக்கும்.

உலகத்தின் ஏனையபாகத்து மனித வர்க்கத்தினர்களைக்காட்டிலும் பாரதநாட்டு மக்கள்தான் புராதன பண்புபெற்றவர்கள். உலகின் இதர மக்கள் வீடுவாயில் இன்றி மர உரிதரித்து வாழ்ந்து வந்தகாலத்தில்கூட நாகரீக வாழ்க்கையிலே வளர்ந்துவந்த பாரத நாட்டினர் நம் பண்புகளில் உண்மை, ஜீவகாருண்யம், ஒழுக்கம், நீதி போன்ற பலவற்றை உலகிற்கே எடுத்துக்காட்டியதை பெருமையுடன் போற்றவேண்டியதுதான்.

போரும் போட்டியும் பயிர்த்துவரும் மேல் நாடுகளில் கூட பார்த்து வியக்கும் முறையில் நம் இந்திய நாட்டிலே பல பெரிய

வர்கள் தோன்றி உலகிற்கு உயரிய போதனைகளை அள்ளி வீசி இறைத்துள்ளனர். புத்தர் பிரான், மகாவீரர், சங்கரர், மத்வர், ராமானுஜர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், ரவீந்திரநாத் தாகூர், மகாத்மாஜி போன்றவர்கள் அத்தகைய மகான்களே. இவர்கள் நமக்களித்துள்ள உபதேசங்கள் உலகம் முழுவதும் மதிக்கப்பட்டு வருகின்றதைக் காண்கிறோம்.

அத்தகைய மகான்களில் இன்னும் நம்மிடமிருந்து பிரிந்து சென்ற மகரிஷி ரமணரும் ஒருவராவர்.

## தபோநிதி

மகரிஷி ரமணர் சென்னை ராஜதானி வடாற்காடு ஜில்லா, திருவண்ணாமலை ஸ்தலத்தில் நகருக்கு இரண்டு மைல் தென்மேல் புறமாகத் தனி ஆசிரமம் அமைத்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். இவரை அணுகி ஆத்மபலம் அடையவேண்டி பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து அன்னிய நாட்டினர்கள் அணுகி பலன் பெற்றனர். எனில், பாரத நாட்டினரில் அவர் பெருமையை அறியாதவர் யார் இருப்பர். வெளிநாட்டினர்கள் பலர் நம்நாட்டினர் தேசத்தின் நாலு பக்கங்களிலிருந்தும் அரசன் முதல் ஆண்டிவரை சகலரும் இவரை வந்து தரிசித்துப்போன வண்ணமிருந்தனர். இளம் வயதிலேயே இவர் உண்மை ஒளியை உணர்ந்து கண்டார். ஆண்டவன் அழைப்பு அணுக அகன்றார் தன் அகத்தை; அகம் அகன்றது. 1896-ம் வருஷம் செப்டம்பர் முதல் தேதி அடைந்தார் அண்ணாமலையாரை தன் வருகையைத் தெரிவித்து தவத்தில் நுழைந்தார். தன்னையே மறந்தவராக பல இடங்களில் கடுந்தவம் புரிந்தார். பல பக்தர்கள் சேர்ந்து உணவு அளித்து ஆசிரமமளித்தனர். தனக்கென அல்லாது தாரணிக்காகத் தோன்றிய திருச்சுழிதந்த திவ்யன், அமர்ந்த தன் ஆசிரமத்திலிருந்தே உலகினருக்கு 'உன்னை முதலில் நீஉணர். நான் யாரென்பதை தெரிந்தபிறகு உலகத்தைத் தெரிந்துகொள்ளு' என்று ஆன்மவிசாரணை புரிய அனைவருக்கும் நன்மொழி நவின்றனர் தன் புன்முறுவல் முகத்தோடு பெரியோர் முதல் சிறு குழந்தைவரைத் தன்னைக்காணவந்த அனைவரையும் தன்வயப்படுத்திக்கொண்ட தபோநிதி. என்னேரமும் அமைதியையும் சாந்தியையும் இருந்த இடத்திலிருந்தே எல்லா இடங்களுக்கும் எடுத்துவீசியமகான்.

பொன்மேனிபூண்டு இன்சொல் அருளி தகைமை தந்ததாதா ஆத்ம பலத்திற்கெதிரில் மிருக பலம் ஒன்றும் செய்துவிட முடியாதென்பதை மேல்நாட்டினருக்கும் நம் நாட்டினருக்கும் என்னாட்டினருக்குமே எடுத்துக்காட்டி வலியிறுத்து மலைச்சரிவில் வாழ்ந்த முனிபுங்கவர்.

## பற்றற்ற பரமன்.

மௌனல்வியினுதவியினல் அருணையை அடைந்து, மகம்மதிய மதத்தினர் பலர் தம்மை யுணர்ந்து அணுக பலன்பெற வாழ்ந்த பெரியார்! ஏசுநாதர் தோன்றிய மேல்நாட்டினர், அவர் போதனையைக்கூட மறந்தவர்களாகி தன்னையணுகி அன்பு, இரக்கம், மன்னிப்பு ஆகிய பல முக்கிய போதனைகளைப் பெற்றுச் செல்லும் படி செய்த பெருமை பெற்ற புகழுடையோன்! மனிதர்களை மட்டில் அல்ல மிருகங்களாகிய பசு, மாடு, கன்று, நாய் பறவைகள், அணில், மயில் ஆக பல ஜீவன்களும் தங்கள் பத்தியையும் அன்புப் பெருக்கையும் தம்மை அணுகி தெரியப்படுத்தும்படிசெய்த தயாநிதி! பற்றற்ற பரமன்! மரம், செடி, கொடிமட்டும் அல்ல, வெய்யில் மழை பனி காற்று முதலிய இயற்கை நீதிகளும்கூட தம்மைத் தெரிவித்துக்கொண்டு செல்லும்படி செய்த தயாளன்! இவரை அணுகி ராஜன் பாபு பேச்சுவார்த்தை நடத்துகையில் "நமக்கு மிஞ்சிய சக்தி ஒன்று இருக்கிறது. அதுதான் உலகத்தை நடத்திச் செல்லுகின்றது" என்ற ஹிதோபதேசம் அருளிய அண்ணல் இவர் இன்று நம்மைவிட்டு பிரிந்துவிட்டார்.

## பெருமையை அளித்த ஸ்தலம்.

அண்ணாமலையார் ஆலயத்தைக்கொண்ட திருவண்ணாமலை நகர் ஹிந்து மக்களுக்குப் புகழும் பெயரும் பெற்றது. சிறந்த சிவஸ்தலம். எண்ணற்ற ஆயிரக்கணக்கான பக்தர்களை ஆண்டிற்கோர் முறை கார்த்திகைத்தீப திருவிழாத் தருணம்வா என்றழைத்துக் கொள்ளக்கூடியது இம்முறையில் இது முக்யம். ஆனல் ரமணர் ஆசிரமமோ அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ப்ரான்ஸ், ஸ்பெயின், போலந்து போன்ற பல வெளிநாட்டினரையும்கூட இன்னாட்டிற்கு அழைத்து இந்தியாவின் பெருமையை

# ஸ்ரீ ரமணத் தியானம்.

கைலாயத்திலின்றும் எழுந்தருளி, திருச்சுழி க்ஷேத்திரத்தில் சுந்தரமையருக்கும் அழகம்மைக்கும் புத்திரனாக அவதரித்து, தன்னருங் குணங்களால் அவர்களை மகிழ்வித்து, தன்தெய்வ சக்தியால் அவர்கள் புனித வாழ்வை அடையச்செய்த திருச்சுழி ரமணா! உன்னை என் மனப் பூர்வமாய் நமஸ்கரிக்கின்றேன்.

※ ※ ※ ※ ※

திடீரென்று மரண பயம் ஏற்பட்டபொழுது யாரிடமும் சொல்லாமல் "சாவு" என்றால் என்ன எது சாகிறது? என்று தனக்குத்தானே விசாரித்துக்கொண்டு மரண சம்பவத்தை நிதர்சனமாக நடித்து, "நான்" "நான்" என்பது அழியும் சரீரமல்ல ஆனால் உண்மைப் பொருளான ஆத்மா—பிறப்பு இறப்புக்குக் கட்டுப் படாமல் நித்தியமாயுள்ள பூரண ஏக வஸ்து என்று இளமைப் பிராயத்திலேயே அதீதமான முடிவுக்குவந்து, குருவின்றித்தானே ஆன்ம ஞான மடைந்து பிரபஞ்ச குருதேவனாகிய சுயம் பிரகாச ரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

※ ※ ※ ※ ※ ※

அருணை நகரையடைந்து. பால சன்யாசிக் கோலம் பூண்டு மௌனவிரதம் ஏற்று கோவிலில் பாதாள லிங்கம் என்ற இருட்டுக் குகையில் தனிமையாக அமர்ந்து, தனதுடலை, ஈ, எறும்பு,

---

முற்பக்கத்தொடர்ச்சி

யும் புகழையும் உலகிற்கு உணர்த்தவந்ததென்றால் இதுவும் மிக முக்கியமானதென்பதை யார் ஏற்கமாட்டார்கள்?

அண்ணாமலையார் அழைப்பின் பேரிலேதான் ரமணர் அருணையை அடைந்தார். ரமண ரிஷிகள் திருவண்ணாமலைக்கு பெருமையையும், புகழையும் அளித்தவர் என்பது மறுக்கமுடியாதவண்ணம் ரமணரின் தத்துவம் வாழ்ந்து, சுதந்திர இந்தியாவின் ஆத்மீக, பொருளாதார, சமுதாய முன்னேற்றங்களுக்கு ஆசிகூற ஆண்டவன் அருள் பிரார்த்திப்போம்!

விஷப்பூச்சி முதலிய ஜீவராசிகளுக்கு இரையாக அளித்து, சரீரம் ரணமாயிருந்ததையும் அறியாமல் நீண்டகாலம் யோகத்தில் வீற்றிருந்த யோகரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

○ ○ ○ ○ ○

துஷ்டர்களின் ஹிம்சையால் யோகத்தடை ஏற்படுமென்று அடிக்கடி இடம்மாறி, சுப்பிரமணியர் கோயில், பூந்தோட்டம், வாகனமண்டபம், மங்கைப்பிள்ளையார் கோவில், குருமூர்த்தம் முதலிய இடங்களில் தங்கி, திருவருணை பக்தர்கள் மூலமாய் மற்றுமுள்ள பக்தர்களுக்குத் தன் பூர்வோத்தரம் வெளியாக, உலகப் பிரக்யாதி பெற்ற தீர ரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

○ ○ ○ ○ ○

பவளக்குளத்தில் தவத்தில் வீற்றிருந்து உறவினரிடம் சற்றும் பாசமற்று, தன் அன்னை சகோதரர்கள் எவ்வளவு பிரயாசப்பட்டு முனிவனை தன்னை வீட்டுக்குத் திருப்ப முயன்றும் சற்றும் இடங்கொடுக்காமல் எள்ளளவும் சலனமற்று மௌன விரதத்துடனிருந்து "அவரவர் பிராரப்தப்படி நடப்பது நடந்தே தீரும்; நடவாதது என்றும் நடவாது சும்மா இருத்தலே நலம்" என்று கடிதத்தில் எழுதி அறிவித்த வேதாந்த ரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

○ ○ ○ ○ ○

யாவர் வினவினபோதிலும் "நான் யார்" என்ற விசார மந்திரத்தையே ஓதி, "நான், நான்" என்ற சப்தம் எங்கிருந்து புறப்படுகிறதென்று உற்றுக் கவனித்துக்கொண்டேயிருந்தால் மனம் அங்கே லயமாகும்; அம்முறையே "தபஸ்" என்றும். ஒரு மந்திரத்தை மானஸிகமாக ஜபம் பண்ணி அந்த மந்த்ரத்வனி எங்கிருந்து புறப்படுகிறதென்று கவனித்தாலும் மனம் அங்கே லீனமாகும்; அம்முறையும் "தபஸ்" என்றும் அருள் வாக்குகளை அளிக்கும் ஆத்ம ரமணா! ஞான ரமணா! உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

(சிறுவர்கட்கென ஓர் பக்தனால் இயற்றப்பட்ட ஒரு நூலிலிருந்து எடுக்கப்பட்டது)



# ஸ்ரீ ரமணத்யானம்.

சிந்தனை செய்மனமே — ரமணனைச்
சிந்தனை செய்மனமே!
சிந்தை விலகிச் சிவானந்த மாகிடச்
சிந்தனை செய்மனமே!

பூசனை செய்கரமே—ரமணனைப்
பொன்மல ரன்பு கொண்டே!
பூச லொழிந்தக நாச முறமனப்
பூசனை செய்மனமே!

அர்ப்பணஞ் செய்மனமே—அனைத்தையு
மர்ப்பணஞ் செய்மனமே!
அற்புதத் தன்மயச் சின்மய வாழ்வினுக்
கர்ப்பணஞ் செய்மனமே!

துள்ளிக் குதிக்காதே—மனமே
துறுதுறுக் காதே!
உள்ளத்தி லுள்ளதி லுள்ள படியிரு;
உண்மை நிலையதுவே!

—சுத்தானந்தர்.

ஸ்ரீ

# ரமண பாதமாலை.

[மு. சிவப்பிரகாசம்]

## காப்பு.

குருமணி ரமணன் றிருவடி வாழ்த்தக்
கரி முக கணபதி கழலிணை தொழுவாம்.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
ரமணன் பாதம் வாழ்கவே;
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க
வாழ்க வென்றும் வாழ்கவே.

அருளே யுருவ மாகி வந்த
வாசான் பாதம் வாழ்கவே
மருளை நீக்கித் தெருள ளித்த
மறையோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

காண்போர் மனதைக் கவர்ந்து கொண்ட
கடவுள் பாதம் வாழ்கவே
வேண்டல் வெறுத்த விரண்டு மில்லா
விமலன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

சோதி மயமாக் காட்சி தந்த
சுவாமி பாதம் வாழ்கவே
ஆதி பகவ னருளைப் பெற்ற
வன்பன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

மெய்யு ணர்ந்து முற்று நீத்த
மெய்யன் பாதம் வாழ்கவே
உய்யும் வழியை யுளவா றுணர்த்து
முரவோன் பாதம் வாழ்கவே, (வாழ்க)

அறிந்து மறிந்தோ னுக்குக் காட்டா
வறிஞன் பாதம் வாழ்கவே
சிறந்த பத்தி நெறியு ணர்த்திய
செம்மல் பாதம் வாழ்கவே. (வாழ்க)

அஞ்சி யடைவோர்க் கபய மளித்த
அண்ணல் பாதம் வாழ்கவே
நஞ்சு மமுத மாகக் கொண்ட
நாதன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

வாள்போற் கைம்மா றென்றும் வேண்டா
வள்ளல் பாதம் வாழ்கவே
தேன்போ லினிக்குந் திருவாக் குள்ள
தேவன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

நானு ரெனப்பா ரளியம் விடென்று
நவின்றோன் பாதம் வாழ்கவே
தானுய் விட்டாற் றுயர்போ மென்ற
சாந்தன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

எப்பா ரத்தையு மேற்கு மிறையென்
றிசைத்தோன் பாதம் வாழ்கவே
செப்பிய வழியி னின்றி டென்ற
சீரோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

ஒன்று நினையா திருசும் மாவென்
றுரைத்தோன் பாதம் வாழ்கவே
என்று முளத்தை யிருத்துன் னிடத்தென்
றிசைத்தோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

என்நூற் கருத்து மனம டக்க
லென்றோன் பாதம் வாழ்கவே
உன்னைக் காண வோர்நூ லேனென்
றுரைத்தோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

பிறருக் கீவ தமக்கா மென்னும்
பெருமான் பாதம் வாழ்கவே
அறிய னீயார் யார்கொ லென்னு
மருளோன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

குற்றஞ் செயினுங் குணமாக் கொண்ட
குரவன் பாதம் வாழ்கவே
நற்றவ மில்லா நாயேன் றனையாள்
ஞானி பாதம் வாழ்கவே. (வாழ்க)

திருச்சுழி யென்னுந் தலத்து தித்த
செல்வன் பாதம் வாழ்கவே
அருளார் சுந்தர மையர் பெற்ற
வழகன் பாதம் வாழ்கவே. (வாழ்க)

# — சோதி. —

"முத்து"

சோதி என்பது ஒளி, கடவுள், சிவன், விஷ்ணு, அருகன்; பிரகாசம், சூரியன், சுவாதிநாள் என்னும் பொருள்களில் வரும். உருவாய், அருவாய்; உளதாய், இலதாய்; மருவாய், மலராய், மணியாய், ஒளியாய்; கருவாய், உயிராய்; கதியாய், விதியாய்; குருவாய் என்று இப்படியெல்லாம் உள்ள இறையைச் சோதிரூப மாக மக்கள் வணங்கிவந்தமை பண்டுதொட்டு இன்றுவரை உள் ளது. சோதிவழிபாடு எச்சமயத்தார்க்கும் உரியதே. சூரியன் எவ்வாறு உலகுக்கெல்லாம் பொதுவானதோ சோதிவழிபாடும் அவ்வாறு பொதுவானதாகும்.

இறைவன் மானிட உருவந்தாங்கிவந்து மணிவாசகப்பெரு மானை ஆட்கொண்டபின்பும் மணிவாசகப்பெருமான் இறைவனை அழைக்குமிடங்களிலெல்லாம் சோதிரூபனென்றே அழைக்கின் றார்.

"சோதியாய்த் தோன்றும் உருவமே
அருவாம் ஒருவனே"

"பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே"

"உள்ளத் தெழுகின்ற ஞாயிறே"

"ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே"

"இரந்திரந் துருக என்மனத்துள்ளே
எழுகின்ற சோதியே"

"திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே"

"பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே"

"அழுதே ஊறிநின் றென்னுள் எழுபரஞ்சோதி"

"சோதியே சுடரே சூழொளி விளக்கே"

இவை மாணிக்கவாசகப்பெருந்தகையின் வாக்குகள். கண்ணி ருளைக்கெடுத்து உலகை விளங்கவைக்கிறான் சூரியன். அச்சூரி

யனுக்கும் ஒளியைக்கொடுத்து ஒளிக்குள் ஒளியாயிருந்து எம் அக விருளை ஓட்டும் ஆதிசோதியின் பெருமையை யாரால் இயம்பமுடி யும்.

தில்லையுளார் மணிவாசகரைத் திருவாசகத்திற்குப் பொருள் கேட்க இதுவே பொருள் என்று நடராசப்பெருமானைக்காட்டிச் சோதியுள் கலந்தருளினர்.

சமீபத்தில் சுத்த சமரச சன்மார்க்கத்தை உலகுக்குத் தூண் டியவர் சோதி அருட்சுடர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர் ஏற்றிய விளக்கே இன்றும் வடலூரில் சத்திய ஞான சபை யாக அழியாதிருக்கின்றது. மக்களின் மனமாயையால் மங்கிய சபையைத் திருமுருக கிருபானந்த வாரியவர்கள் புதுப்பித்துள் ளார்கள். அச்சோதியை உலகெலாம் பரப்புவதற்குத் தொண் டர்கள் தேவையெனப் புதுவைத் தவயோகி சுவாமி சுத்தானந்தர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். சுவாமிகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த "மகாத்மா இராமலிங்கம்" என்ற நூலுக்கு பே ஞட்டில் தகுந்த மதிப்பு உண்டு. தமிழர்கள் அத்தகைய நூலு க்குப் பொருளுதவிசெய்து அச்சிட்டு வெளிப்படுத்தினுல் சமரச சோதியின் பிறப்பிடம் தமிழ்நாட்டில் உதயமான பெருமையைத் தமிழர்களும் தமிழ்நாடும் அடையலாமல்லவா? அருட்சுடர் வள் ளலாரின் சிலவாக்குகளைக் கவனியுங்கள்.

"மாற்றறியாதசெ ழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர் வண்ணக்கொழுந்தே"
"அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச் சிவமே"
"சுத்த சிவ மார்க்கந் திகழ்ந்தோங்க
வருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்"
"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை"
"அன்பர் மனக் கமலம் விரிக்குங் கதிரொளியே"

பிரமவிஷ்ணுக்களாலும் அடிமுடிதேடியறியா எம்பெருமான் சோதிரூபமாக நின்ற இடம் திருவண்ணுமலையாகும். கார்த் திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் நடைபெறும் சோதி தரிசனம் திருவண்ணுமலையில் மிக அற்புதமானதாகும். சோதி

யின் உண்மையை யறியா மக்களை ஈடேற்றச் சோதிரூபமாக வாழ்ந்தார் முனிவர் ஒருவர். அவர்தான் பகவான் ரமண மகர்ஷிகள். அவரது அருளுணக்கை ஒருமுறை பெற்றவர்கள் அவர் சோதியாய்த் தோன்றிச் சோதியாய் விளங்கிச் சோதியிற் கலந்து சோதியானுர் என்பதை நன்கு உணர்ந்திருப்பார்கள். 'சுவாமி சுத்தானந்தர் பகவான் ரமணரின் தரிசனத்தைப் பெற்ற இடத்தில் கூறும் வாக்குகளைக் கவனியுங்கள்.

"வலதுபுறம் ஒருபால்வெளியே தென்பட்டது; திறந்த வால் வெளியென்றெண்ணி அதை நோக்காது முனிகளுக்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து அடியேன் எனுமுன்னே ஆகா! அங்கேபகவான் என்றுர் முனிகள்! உடனே தூக்கிவாரிப்போட்டது! ஆகா! நான் நாடித்தேடிய பொருளன்ருே அருவாக அருகிற் பளிச்சிட்டது! உடனே வலப்புறந் திரும்பவுங் கண்டதென்னே! மனிதவடிவல்ல; ஒரு வெண்ணீற்றுக்குவியலே முதலிற்றென்பட்டது. பிறகு முற்றும் ஜோதிப்பிழம்பு! பிறகே கைகாலை மடித்து உட்கார்ந்து, இதையாட்கொண்ட பகவான்"............

பகவான் ரமண மகர்ஷிகளின் ஆத்மா ஜோதி ரூபமாக உடலினின்றும் பிரிந்து கலந்ததைத் திருவண்ணுமலையிலும் பக்கத்து ஊர்களிலும் உள்ள அன்பர்கள் கண்ணுரக்கண்டு கருத்துற மகிழ்ந்தார்கள். கண்ணுரக் கண்டவர்களிலும் சிலர் நம்பிக்கையின்மையால் அதெல்லாம் ஒன்றுமில்லை. அதுவால்வெள்ளி, வீழ்வெள்ளி என்று கூறுகின்றனர். காமாலைக் காய்ச்சலுள்ளவன் தேன் கசக்குதென்ருல் நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா? அவர்களைப் பிடித்திருக்கும் காய்ச்சல் மாற சோதியை வணங்குவோமாக. மணிவாசகப் பெருந்தகையினதும் அருட்சுடர் வள்ளலாரினதும் மறைவு உண்மை என்பதை உலகமக்களுக்கு நிரூபிக்கவே ரமண மகர்ஷிகளும் சோதியாய் கலந்தாரென்ருல் அதிலோர் பிழையுமில்லை.

சோதி சோதி சோதி சோதி
சோதி சோதி ஆத்ம சோதி.

---

ஸ்ரீ ஷ

# ரமணமுனி தோத்திரம்.

1 மண்ணுலகோர் செய்தவமோ மாதாவி னறப்பயனோ
புண்ணியத்தி னுருவெடுத்துப் போந்தருளிப் பொலிவெய்தி
அண்ணலுறை யருணைநக ரமர்ந்துறைந்தே வருமடியார்
எண்ணரியா ரிடர்தீர்த்த விருஞ்சுழியற் பெருமானே.

2 தேனமருங் கொன்றைவிரி செஞ்சடையா ரொருநால்வர்க்
கானநிலை கொண்டுமறைக் கல்லாலின் கீழிருந்தார்
ஈனமுடைப் பெருந்திமிர மெய்தியபல் லடியார்க்கு
ஞானமணி விளக்காகி நல்லருணை வாழ்ந்தனையே!

3 சைவநெறி தழைத்தோங்கத் தமிழ்நாடு சீரெடுக்க
உய்யுநெறி யஞ்செழுத்தி னுள்ளீட்டை யன்பர்குழாம்
மெய்யுணர்விற் போற்றிவர மெய்ஞ்ஞான நூலளித்த
ஐயவெமை விட்டகன்ற தடியேஞ்செய் தவக்குறைவோ!

4 ஐம்புலமாம் வேடரிடை யன்றுதொட்டு வாழ்ந்ததாழ்ந்த
வெம்பிறவி வேலையினி வீழாதே யாள்வனென
அம்புவியிற் சற்குருவாய் வந்தவரி னீக்கியெமக்
கின்பளித்த குருமணியே ரமணமணி நாயகனே!

ஒருவடிவையுளத்திருத்தியுலகாசைதமைநிறுத்தியோங்குயோக
திருவருளினுடன்சேர்ந்துதேறரியமெய்ஞ்ஞானத்தேறலுண்டு
அருணையெனும்பொன்னமளியதுபதியாண்டுறுதுயில்கொண்டடியார்வாழக்
குருவடிவாயவர்பாவக்குறும்பெறிந்தரமணமுனிக்குருதாள்போற்றி.

தஞ்சமெனவருமடியார்தமக்கருளினோக்கருளித்தாயேயாகி
யஞ்சலெனமுகங்காட்டியறநெறியின்றிறங்காட்டியாசையூட்டிக்
கஞ்சமலர்த்திருவடிக்கேயென்புருகமயிர்பொடிப்பக்கண்ணீர்சோர
வஞ்சமனந்திருத்தியவர்வாழ்வுபெறவைத்தகுருமணிதாள்போற்றி.

கோட்டிளந்தாள்பிறையணிந்தார்தன்முடியுந்திருவடியுங்குறித்துமாலுந்
தோட்டிளந்தண்மலரயனுமின்றளவுந்தேடியிடத்தோன்றனுகிக் [டு
காட்டுவன்யான்வருகவெனவருணையணைந்தவன்வடிவுகாட்டக்கண்
வேட்டுவன்தன்புழுப்போலவிமலனுருக்கொண்டருளும்விபுதாபோற்றி.

ரமண அடியார்க்கடியான் க. வேலுப்பிள்ளை.

# செய்தித் திரட்டு.

## ரமணஜோதி அருணஜோதியிற் கலந்தது.

திருவண்ணுமலையில் ஜோதிரூபமாக இருந்து மக்களுக்குக் காட்சிதந்த பகவான் ரமணமகர்ஷிகள் 14-4-50 வெள்ளிக்கிழமை இரவு 7.45 மணிக்கு ஜோதியுட் கலந்தருளினர். அதன் ஞாபகார்த்தமாகப் பின்வரும் இடங்களில் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

கொள்ளுப்பிட்டி: பூதஉடல் சமாதிவைக்கப்பட்ட தினமாகிய 15-4-50 சனிக்கிழமை ரமண பக்தர்கள் ஒன்றுசேர்ந்து ஓரிடத்தில் பிரார்த்தனை நடத்தினர்.

கொக்குவில்: ஸ்ரீ இராமகிருஷ்ண சைவவித்தியாசாலை மண்டபத்தில் 18-4-50 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. முதலில் மாணவர் ரமணர் பேரில் பிரார்த்தனை நடத்தினர். திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தமது தலைமையுரையில் தமிழ் நாடும் சைவமதமும் மாத்திரமல்ல உலகம் முழுவதுமே அவர்கள் காட்டியவழியில் கடைத்தேறவேண்டுமெனக் குறிப்பிட்டனர். பின்னர் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் பேசுகையில் தற்போது உலகத்திற் றோன்றியுள்ள பிரச்சினைகளையெல்லாம் வெறும் விஞ்ஞானம்மாத்திரம் தீர்த்துவிடாதென்றும் மகர்ஷிகளைப்போன்றாரின் உபதேசங்களே வழிகாட்டத்தக்கனவென்றும் எடுத்துச்சொன்னர். திரு. வடிவேலுச்சாமியார் அவர்கள் பேசுகையில் ரமணர் காட்டிய பாதையில் நாம் சென்று உய்யவேண்டுமெனவும் அதற்காக முயற்சிக்கவேண்டுமெனவும் குறிப்பிட்டு ரமணர் அருளை வேண்டினர்கள். ஈற்றில் ரமணரின் சரித்திரம் வாசிக்கப்பட்டது.

வெள்ளவத்தை: சைவ மங்கையர் கழகமண்டபத்தில் 17-4-50 புதன்கிழமை நடைபெற்றது. பிரார்த்தனைக்குரிய பாடல்களை ஸ்ரீயதி விவேகானந்தாவும் வேறு குழந்தைகளும் பாடினர். பகவானின் மகாசமாதியின் தத்துவங்கள்பற்றி திருவாளர்கள் குல சபாநாதன். இ. எவ் குணரத்தின, க. இராமச்சந்திரா ஆதியோர் சொற்பொழிவாற்றினர்.

நாவலப்பிட்டி: ஆத்மஜோதி நிலயத்தில் 23-4-50 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. செல்விகள் இராமச்சந்திரா ரமண தோத்திரங்கள் பாடினர். பகவானின் சரித்திரச்சுருக்கம் வாசிக்கப்பட்டது. ரமணர் அர்ச்சனைமாலை வாசித்து அன்பர்கள் அனைவரும் அர்ச்சனை செய்தனர்,

கொழும்பு சத்சங்கம்: வெள்ளவத்தை 42ம் வீதியில் பிரார்த்தனையும் அர்ச்சனையும் நடைபெற்றன.

சாவகச்சேரி; சிவன் கோயில் முன்றிலில் 29-4-50 சனிக்கிழமை நடைபெற்றது. ரமணதாசன் திரு, ஏ. செல்லத்துரை, திரு. பி. எம். ஞானப்பிரகாசம் ஆதியோர் ரமண மகர்ஷியின் வாழ்க்கையில் மக்கள் பின்பற்றவேண்டியன எவை என்பதுபற்றிப் பேசினர். ஈற்றில் பகவான் அருளிய அக்ஷரமாலை அன்பர்களால் ஓதப்பெற்றது.

தொண்டைமாறு: செல்வச்சந்நிதி கோயிலுக்கு அருகாமையிலிருக்கும் ஆனந்தாச்சிரமமடத்தில் 16-4-50 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது,

கொழும்பு வானொலி நிலையம்: 1-5-50 திங்கட்கிழமை "பகவானின் இறுதிநாட்கள்" என்பதுபற்றி திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் கொழும்பு வானொலி நிலையத்தில் பேசினார்கள்.

உனுப்பிட்டியா இந்து சன்மார்க்க சங்கம்: 7-5-50 ஞாயிற்றுக்கிழமை ஷை சபையில் பிரார்த்தனைக்கூட்டமொன்று நடைபெற்றது. அத்தருணம் ஆத்மஜோதி ஆசிரியர் "ஜோதியிற் கலத்தல்" என்னும் விஷயம்பற்றி உருக்கமாகப் பேசினார். இச்சங்கம் பகவானின் திருநாமத்தை முன்னிட்டு 16-4-50 ஏழைகட்கு அன்னதானம் அளித்தது.

## மங்கையர்க்கரசியார் குருபூஜை;

கரற்றன் சைவமகாசபை ஆதரவில் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் 21-4-50 வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது வழக்கம்போல் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. செல்விகள்

இராமச்சந்திரா பக்திப்பாடல்கள் பாடினர். திரு. க. இராமச்சந்திரா மங்கையர்க்கரசியார் சைவம் வளர்த்த பெருமைபற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினார்கள்.

## ஸ்ரீ சங்கரர் ஜெயந்தி.

நாவலப்பிட்டி இந்து வாலிப சங்க ஆதரவில் 27.4-50 சனிக்கிழமை ஸ்ரீ சங்கரர் ஜெயந்தி கொண்டாடப்பட்டது. முதலில் கூட்டுப்பிரார்த்தனையுடன் ஆரம்பமாயது. செல்விகள் இராமச்சந்திரா, சரஸ்வதி, இராஜேஸ்வரி ஆதியோர் பக்திப்பாடல்கள் பாடினர். திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் ஸ்ரீ சங்கரர் வாழ்க்கை பற்றி இனியதோர் சொற்பொழிவாற்றினர்.

## காந்தி ஞாபகார்த்த மண்டப அத்திவார விழா.

நானுஓயா காந்திசேவாசங்க ஆதரவில் 30.4-50 ஞாயிற்றுக்கிழமை ஷெ அத்திவாரவிழா நடைபெற்றது, அத்தருணம் இ. ஜி. குரூவ்ஸ், தொழில் மந்திரி எர். டி, வண்டா, திரு, எஸ். தொண்டமான், திரு. சே. இராஜலிங்கம், திரு. எம். கனகசபை, திரு. கே. இராமச்சந்திரன் ஆதியோர் சமுகம்கொடுத்து விழாவைச் சிறப்பித்தனர்.

## சுவாமி சுத்தானந்தர் ஜெயந்தி.

கொள்ளுப்பிட்டியில் 12-5-50 வெள்ளிக்கிழமை கொழும்பு சத்சங்கத்தாரால் பிரார்த்தனையுடன் ஷெ ஜெயந்தி கொண்டாடப்பட்டது.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் அவர்களின் 54 வது ஜனனவிழா சிவகெங்கை சுத்தானந்த ஸமாஜ கட்டிடத்தில் 13-5-50 காலை 7-10 பாராயணம் மாலை 5-30 – 7 பொதுக்கூட்டம் இரவு 7—8-30 இன்னிசைவிருந்துகளுடனும் நடைபெற்றன.

## கூட்டு வழிபாடு.

அன்பர் மூ. சு. திருவிளங்கம் அவர்களின் முயற்சியால் வவனியா, முல்லைத்தீவுப் பிரிவில் கூட்டு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பெற்று ஒழுங்காய் நடைபெற்று வருவது கேட்டு அகம்மிகமகிழ்

கின்றோம், மருதோடை கந்தசுவாமிகோயில், வவுனியா கந்தசுவாமிகோயில், நொச்சிமோட்டை ஆகிய இடங்களில் 1948ம் ஆண்டுதொடக்கமே கூடுட்வழிபாடு நடைபெற்று வருகின்றன. பாலாமைக் கல்லுப்பிள்ளையார்கோவில், மரை அடித்தகுளம், குமாரபுரம், ஒட்டிசுட்டான், பாலம்பிட்டி ஆகிய இடங்களில் 20-4-50 —23-4-50 தேதிகளில் அன்பர் திருவிளங்கம் அவர்களால் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

## கூட்டுப்பிரார்த்தனையும் வரவேற்புக்கூட்டமும்.

நிகழும் விகிர்திஸு சித்திரைமீ 12ந் திகதி தொடக்கமாக ஸ்ரீ காசிவிநாயகர் ஆலயத்திலே பாலர் ஞானோதய சபையாரால் ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. நான்காவது நாள் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் ஸ்ரீமான் நா. முத்தையா அவர்களும் கூட்டுப்பிரார்த்தனையில் பங்குபற்றினார்கள். பின் சபை மாணவர்களால் சபைத்தலைவர் அவர்களது தலைமையின்கீழ் ஓர் வரவேற்புக்கூட்டமும் சிறப்புறநடைபெற்றது.

## சங்கானைமேற்கு கிராமமுன்னேற்றச்சங்கம்,

ஷெ சங்க ஆதரவில் சித்திவினாயகர் ஆலயத்தில் 2-4-50 வெள்ளிக்கிழமை கூட்டு வழிபாடு ஒன்று ஆரம்பித்துவைக்கப்பெற்றது. சபையினர் வாரந்தோறும் அதைத் தவறாது நடத்திவருவதாக முயற்சி செய்கின்றனர்.

---


—நான்யார்—நான்யார்—நான்யார்—நான்யார்—நான்யார்—

நான்யார்? — நான்யார்?

# நான்யார்?

நான்யார்? — நான்யார்?

—நான்யார்—நான்யார்—நான்யார்—நான்யார்—நான்யார்—

—நான்யார்—நான்யார்—

—நான்யார்—நான்யார்—

# The Golden Master.

Grief hath grown silent with its own excess
And will not weep lest it betray his trust,
Even in this dark hour of dire distress
He lights the flame of knowledge through our dust.

Illumining its blindness wide and far
He glitters from his heaven of deathless grace.
In every speck and stone, in every star
We see the lonely wonder of his Face,

Ignorance rumours that our King departs;
Where can he go, O where?-the being moans,
He who has made rich kingdoms of our hearts
And of our thoughts his countless jewelled thrones?

May he forgive our wavering faith, forgive
The folly of our doubts whose eyes are dim;
How dare we move or breathe except through him?
How could we live if he should cease to live?

(Composd and sung by Harindranath Chattopadhyaya
at the Mathrubutheswarar Temple, Thiruvannamalai.
soon after the passing away of Sri Ramana Maharishi)

Registered at the G. P. O. as a News Paper


# புதுயுக நிலையம், புதுச்சேரி.

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

ஆத்மீக சாதகர்களுக்கு இரு பொக்கிஷங்கள்.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின் தவத்தில் அரும்பிய இருமலர்கள்.

## அருட்செல்வம்.

தமிழர்க்ளுக்கு "பைபிள்" போன்றது. பாடசாலைகளிலும் வீடுகளிலும் மாணவருக்கும் வயது முதிர்ந்தோருக்கும் நித்திய பாராயணத்திற்கு ஏற்றது. கூட்டுவழிபாடு நடத்துவோருக்கு ஏற்றபாடல்கள். ஆத்மீகப் பேச்சாளர் எடுத்துக் கையாளக்கூடிய அருமையான பாசுரங்கள்,

விலை ரூபா 2/- மாத்திரமே.

இலங்கை அன்பர்கள் 12 பேர் ஒன்று சேர்ந்து எழுதினால் V. P. மூலம் வந்துசேர ஒரு புத்தகம் 2 ரூபாய் ஆகிறது. தனித்தனி V. P. மூலம் பெறுவதாயின் 3 ரூபாவுக்குக் கிட்டவரும். சமூகமுன்னேற்றச்சபைகள், சங்கங்கள் V, P, மூலம் தொகையாக எடுத்து உரிய விலைப்படி அன்பர்களுக்கு வழங்கலாம்.

## ஆத்ம சோதனை.

(சுத்தானந்தரின் அனுபவங்கள்)

விலை ரூபா 5/-

தமிழுலகம் ஆவலாக எதிர்பார்த்த 'ஆத்மசோதனை' வெளிவந்துவிட்டது.

500 பக்கங்கள் கொண்ட அழகிய நூல். சுவாமிகளின் பிறந்தநாளாகிய மே மாதம் 11-ந் திகதி திருவிழா நடத்தி சுத்தசங்கம் சுவாமிகளுக்கு அளித்தது. சுவாமிகளின் நூல்களையும் கொள்கைகளையும் பரப்பவே சுத்தசங்கம் சென்னையில் உருவாகிறது, 'ஆத்மசோதனை' வேண்டுவோர், 'சுத்தசங்கம்', வான்கார்டு பில்டிங், 2, லைன் பீச், மதராஸ் என்றவிலாசத்திற்கு அல்லது புதுச்சேரி 'புதயுக' நிலையத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.


கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர் நா.முத்தையா, 'ஆத்மஜோதி' நிலையம், நாவலப்பிட்டி; (சிலோன்)

நாவலப்பிட்டி, சரவண' பிரஸில் பதிப்பித்தது 4 5-50